காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)


# காவலன்



கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.



எதிர்பாருங்கள்!
அடுத்த இதழிலிருந்து
வாரந்தோறும் வெளிவரும்
திரு. சி. ஏ. செல்வராசா
எழுதும்
கடவுள்தந்த இருமலர்கள்
என்ற தொடர்கதையை.



94-ம் புத். | 1969-ம் ஆண்டு சித்திரை மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 13-ம் இல.

## சம்பேதுரு சதுக்கத்தில் சப்திக்கும் ஒலிகள்

# பொது நிலையினரே திருச்சபையின் உண்மையான சாட்சிகள்

— 6-வது சின்னப்பர்

**இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவில் பரி. தந்தை 6-வது சின்னப்பர், தமது மேய்ப்புப்பணியில் பங்கெடுப்பதற்காக உலகின் பலபாகங்களின் பிரதிநிதிகளை அடக்கிய ஒரு பொதுநிலையினர் சங்கத்தை ஏற்படுத்தினார். இச்சங்கம் ஐந்தாவது முறை அண்மையில் ரோமாபுரியில் சந்தித்தபொழுது அவர்களுக்கு பரி. தந்தை ஒரு பேட்டியளித்தார். பொதுநிலையினர் சார்பாக ஐவரி கோஸ்ட்டைச் சேர்ந்த தலைவர் டாக்டர் யோசவ் அமிக்தியா பேசினார். அதன்பின் பரி. தந்தை கொடுத்த பேச்சின் சாராம்சம் இங்கே தரப்படுகிறது.**

பொதுநிலையினர் திருச்சபையில் வகிக்கும் முக்கியமான இடமும் அவர்கள்மேல்சார்ந்த பணியும் தற்போதைய மறையியலிலும் வத்திக்கான் இரண்டாவது சங்கத்திலும் மிக்க கரிசனையைக் கவர்ந்திருக்கிறது. இதற்கிணங்க நீங்கள் உங்கள் அன்பையும் பிரமாணிக்கத்தையும் திருச்சபைக்குக் காட்டி வருகின்றீர்கள். உங்கள் விருப்பம் போன்றே எங்களிலும் அவ்விருப்பம் வளர்கின்றது.

### உரையாடல் அவசியம்

பொது நிலையினரும் அவர்களுக்கு சேவைசெய்யவிருக்கும் திருவாட்சியாளரும் தொடர்பான உரையாடல் செய்யவேண்டும். முன்பிலும் பார்க்க தற்போதைய சூழ்நிலையிலும் பிரச்சினைகள் மத்தியிலும் குருவுக்கும் சாதாரண கிறிஸ்தவனுக்குமிடையில் இருக்கவேண்டிய தொடர்பு மிகமுக்கியமானது. இந்த உரையாடல்கள் அளவாகவும் சரியான சூழ்நிலையிலும் நடத்தப்படாவிடின் பெரும் தலையிடிகளையும் இறைமக்களின் மத்தியில் பலகுளப்பங்களையும் கொண்டுவரக்கூடியது.

### நேரடியான சாட்சிகள்

வெவ்வேறு இடங்களில், சூழ்நிலைகளில், வேலைஇடங்களில், சிந்தனை வட்டாரங்களில் இயக்கங்களில் நேரடியாக ஈடுபட்டு கிறிஸ்துவிற்காகச் சாட்சியமளிப்பவர்கள் நீங்களே. நீங்கள் இச்சாட்சியத்தை அளிக்காவிட்டால் வேறுயார் இதைச்செய்வார்கள்?

### ஒரே உடலின் அங்கத்தினர் நாமெல்லோரும்

உங்கட்கும் எங்கட்குமிடையில் இருக்கவேண்டிய ஒற்றுமை ஓர் உடல் ஒற்றுமையாக இருக்கவேண்டும். பிதாவின் கரிசனை பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அவைகளை நிவிர்த்திசெய்ய முயற்சிப்பது. பிள்ளைகளின் ஆவல் பிதாவின் சொல்லைக் கேட்டு அதை வரவேற்று அதை நடைமுறையில் கடைப்பிடிப்பது. இதற்கு நாங்கள் உங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

எம்முடைய பெரிய கரிசனை என்னவென்றால் நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவிற்கு பிரமாணிக்கமாக அவரின் இரட்சணிய செய்தியை உலகத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்பதே. தற்போது திருச்சபையின் பலவட்டாரங்களில் கேட்கும் எதிரொலிகள், தலைச்சுற்றுகள், குளப்பங்கள் மத்தியில் நாமெல்லோரும் கிறிஸ்துவிற்குச் சாட்சியமளிக்கும் பணியில் பிரமாணிக்கமாக இருக்கவேண்டுமென்று பிராத்திப்போமாக.

● மதர் தெரேசாவின் பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரிமாருக்கு இங்கிலாந்திலே லிவர்ப்பூல்நகரிலிருந்து 1,400 பவுண் பெறுமதியான அம்புலன்ஸ் டிஸ்பென்சரி ஒன்று வங்காளத்திலுள்ள சாந்திநகரின் குஷ்டரோகர் குடியேற்ற தலத்துக்கென்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

## குவாலாலம்பூர் மேற்றிராணியார்



குவாலாலம்பூர் மேற்றிராணியாரும் தமிழ்ப் பிரமுகருமான மகா வந். டோமினிக் வேந்தர் கோன்ஆண்டகை அவர்கள் ரோமாபுரி செல்லும் வழியில் யாழ்ப்பாணத்தில் இருநாட்கள் தங்கி, தமது இனசனர் ஆதியோரைச் சந்தித்து சென்ற 11-ந் தேதி பிரயாணமாயினார்.

அர்ச்சியசிஷ்டவர்களின்

## பரிசுத்தபண்டம்பற்றி புதிய ஒழுங்குகள்

பரிசுத்தரின் தலைஓடுகளும் மற்றும் சரீர அங்கங்களும் பரி. பண்டங்களில் இனி இடம்பெறமாட்டாவென்றும் இவை பற்றிய புதிய ஒழுங்குகள் விரைவில் வெளிவர இருக்கின்றன என்றும் வத்திக்கான் வட்டாரங்களில் பேசப்படுகின்றன: பரிசுத்த பட்டம் கொடுப்பதற்கான ஒழுங்குகளை திருத்தியமைக்க பாப்பரசரால் நியமிக்கப்பட்டகுழு, பரிசுத்தரின் சரீரம் ஒருவித பிரிவுமின்றி முழுமையாகப் பாதுகாக்கப் படவேண்டுமென்று தெரிவிக்கிறது.

## மாடிமாளிகை விற்று மற்றவர்க்கு உதவுகிறார் பரிசுத்த தந்தை

பாரிஸ் மாநகரத்திலே பரிசுத்த ஸ்தானத்திற்கு சொந்தமான எட்டு அடுக்குமாளிகை 100 லட்சம் டலருக்கு விற்கப்பட்டிருக்கின்றது. இந்தப்பணம் தென் அமெரிக்காவின், கலம்பியாவில் தாம் கண்ட மக்களின் வறுமைக்கு உதவியளிக்கும் நிதியாக இருக்கவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றார் 6-வது சின்னப்பர். அந்நாட்டுமக்களின் வறுமையை அகற்றி முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்கு, தமது கொடை ஓர் ஆரம்ப கொடை என்றும் இன்னும் தொடர்ந்து பல கொடைகள் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

## "தமிழ் ஒரு மதத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல"

— ம. பொ. சி.

**இதயம் கவரும் இலக்கியங்களைக் கொண்ட இத்தாலிய நாட்டான் இங்குவந்தான் - பெஸ்கிஎன்ற பெயரில் - தேன் சொட்டும் செந்தமிழ் அவனைத் தொட்டது - வீரமாமுனிவராகி - தேம்பாவணியைச் செய்து தந்தான். அவன் ஊரால் இத்தாலியன்; உள்ளத்தால் தமிழன். தமிழ் எவர் வீட்டில் பேசப்படுகிறதோ அவரெல்லாம் தமிழர். இவ்வாறு தமிழ் அரசுக்கட்சியின் 11வது மாநில மாநாட்டில் கலந்து சிறப்புச் சொற்பெருக்காற்றிய சிலம்புச் செல்வன் ம. பொ. சிவஞான கிராமணியார் கூறினார்.**

தொடர்ந்து பேசுகையில் "பி. யு. போப்- பைபிளும் கையுமாக வந்த பாதிரியாவர். தமிழ் கற்றார். கற்றதோடு நின்றுவிடவில்லை. இங்கிலாந்து சென்று பெண்கள் அவையொன்றில், "உங்கள் மென் உதடுகளால் பேசுவதற்குத் தமிழைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இவர் இறந்தபின் தன் சமாதியிலே "ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்" என்று பொறிக்கச் செய்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரிவரே. எனவே இவை எல்லாம் நமக்கு எதை வலியுறுத்துகின்றன? "தமிழ் ஒரு மதத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல; அது பேசும் ஒவ்வொருவருக்கும் சொந்தம். தமிழ் ஒரு மதத்திற்கு மாத்திரம் சொந்தமென்பது சரியல்ல" என்றும் கூறினார்.

2-ம் வத்திக்கான்

## திருச்சபையில் உயிர்த்தயேசு தங்கியிருக்கிறார்

"சிலுவையில் அன்று
தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தவர்,
அதையே இன்று.........
திவ்விய நற்கருணையிலும் வீற்றிருக்கிறார்
திருவருட்சாதனங்களில்
தமது வல்லமையால்
எவ்வாறு தங்கியிருக்கிறார்.
தமது வார்த்தையிலும்
அவர் தங்கியிருக்கிறார்.
திருச்சபையில்
திருமறைநூல் வாசிக்கப்படும்போது
அவரே பேசுகிறார்.
இரண்டு மூன்று பேர்
என்பேரால்
எங்கே கூடியிருப்பார்களோ
அங்கே அவர்கள் நடுவே
நான் இருக்கிறேன் (மத். 18: 20)
என்று வாக்குறுதி அளித்த
அவரே திருச்சபை மன்றாடும்பொழுதும்
சங்கீதங்களைப் பாடும்பொழுதும்
திருச்சபையில் இருக்கிறார்.
உண்மையாகவே,
இறைவனுக்கு மாட்சி நல்குவதும்
மக்களைப் புனிதப்படுத்துவதுமான
இம்மாபெரும் பணியில்,
தம் ஆண்டவரைக் கூவி அழைத்து,
அவர் வழியாக
என்றும் வாழும் தந்தைக்கு
வழிபாடு நடத்தும்
தமது அன்புமிக்க
மணமகளாம் திருச்சபையைக்
கிறிஸ்து என்றுமே
தம்முடன் இணைத்துக்கொள்ளுகின்றார்.

(இறைபணி, 7.)

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு ஒரு சமூக வழிபாடு

பி. சவரிமுத்து

**திருவழிபாடு** பொதுவாகத் தேவ ஆராதனை என்று விளங்கப்படுகிறது. ஆராதனை என்னும்போது ஒவ்வொருவரின் மனத்தில் காணப்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் செயலாக அது இருக்கிறது. ஆராதனையின் மூன்று நோக்கங்களை (1) தேவனுக்கு மரியாதை செலுத்துதலும் (2) அவருக்கு நன்றிகூறுதலும், (3) அவருக்கு நிந்தைப்பரிகாரம் செய்தலும் எனக் குறிப்பிடலாம்.

கிறீஸ்துநாதர் தாம் உலகுக்குவந்த முக்கிய நோக்கம், "பிதாவானவருக்கு மகிமை செலுத்துவதற்கு" என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

திருச்சபையானது ஆராதனையின் தன்மையைத் திட்டமிட்டுத் தீர்மானித்திருக்கிறது. என்றாலும் கல்வாரிப்பலியாக பூசைப்பலியும், அருள்சாதனங்களாகிய தேவதிரவிய அனுமானங்களுமே திருவழிபாட்டின் இருபெரும் அம்சங்களாகத் திகழ்கின்றன. இவை இரண்டும் தனிப்பட்ட ஆராதனைக்கு அல்ல, ஆனால் கூட்டு ஆராதனைக்கே இடமளிக்கின்றன.

பூசைப்பலியில் குருவானவரும், பூசைக்கு உதவுபவர்களும், பூசையில் பிரசன்னமாய் இருப்போராகிய மூன்றுவர்க்கத்தினரும் சேர்ந்து தேவனுக்கு ஆராதனையைச் செலுத்துகின்றனர் என்பதை நாம் மறத்தலாகாது. விசுவாசிகளுக்குப் பூசைப்பலியில் முக்கியமான ஒரு பங்கிருக்கின்றதை நாம் அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தவேண்டியிருக்கிறது. ஏனெனில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பயனாகத் திருவழிபாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் எத்தனையோ இருப்பினும் பல விசுவாசிகள் இன்றும் திவ்வியபூசைப் பலி வேளையில் பார்வையாளராகவே தங்களைக் காண்பிக்கின்றனர்.

இப்போது பூசைவேளையில் "சம்மனசுகளின்கீதம்," "விசுவாசப் பிரகரணம்," "பரிசுத்தர்," "கர்த்தரின் செபம்" போன்ற பலசெபங்களைக் குருவானவரும் விசுவாசிகளும் ஒன்றுசேர்ந்தே செபிக்கின்றனர். குருவானவரும் '**செபிப்போமாக,**' '**எங்கள்** கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் **செலுத்துவோமாக,**' "**என்னுடையவும், உங்களுடையவும்** இப்பலியானது சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரனுக்கு உகப்பாயிருக்கத் தக்கதாக மன்றாடுங்கள்." "**நாங்கள்** ஒப்புக்கொடுக்கின்ற இந்தக் கொடைகளை இந்தக் காணிக்கைகளை, இந்த மாசற்ற திருப்பலிகளைத் தேவரீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று" என்பனபோன்ற செபங்களால் பூசைப்பலி ஒரு சமூகப் பலியாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகிறார். உலகமக்கள் யாபேரும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை யாவரும் நன்கறிவர். எனவே ஒரு சமூகமாகவாழும் மக்கள் — விசாரணைப் பங்கு அல்லது விசேஷ விசுவாசிகளின் கூட்டம் ஒன்றுசேர்ந்து குருவானவருடன் ஒப்புக்கொடுக்கும் பலியாகப். பூசைப்பலி இருக்கின்றது.

இப்பலியைப் போலவே ஏனைய அருள்சாதனங்களாகிய தேவதிரவிய அனுமானங்களுமிருக்கின்றன. **ஞானஸ்நானத்தின்** மூலம் மக்கள் திருச்சபை என்னும் சமூகத்தின் அங்கத்தவர்கள் ஆகின்றனர். இச்சமூகத்தில் சேர்ந்தும் மக்கள் பிதாவாகிய சருவேசுரனின் புத்திரராகக் கிறிஸ்துவிலும், கிறிஸ்துவோடும், தூய ஆவியானவரின் அன்பின் சக்தியோடும் வாழ்கின்றனர். விசேஷமாக **உறுதிபூசுதல்** மூலம் மக்கள் தூய ஆவியானவரின் ஏழுவிசேஷ கொடைகளைப் பெறுவதால் அவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் சக்தியைப் பெறுகின்றனர். திவ்விய நற்கருணை பூசைப்பலியின் திருவிருந்தாகக் கணிக்கப்பட்டு வருகிறது. ஒரு சமூகமாகிய விசுவாசிகள் தாங்கள்சேர்ந்து ஒப்புக்கொடுத்த பலிப்பொருட்களைத் திருவிருந்தாக உட்கொள்ளுவது — பந்திஅமர்ந்து உண்ணுதல் மிகவும் பொருத்தமும் தகுதியுமானதே சாதாரண சொற்களில் கூறவேண்டுமாகில் விசுவாசிகள் யாபேரும் ஒரு 'சபை'யில் பங்குபற்றுகின்றனர் எனலாம்.

**மெய்விவாகம்** என்ற தேவதிரவிய அனுமானம் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புள்ள தொன்றாகப் பண்டுதொட்டுக் கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. புதுத்தம்பதிகள் ஒரு குடும்பமாகச் சீவியத்தை ஆரம்பிக்கின்றனர். குடும்பங்கள் பலசேர்ந்தே ஒரு சமூகமாகத் திகழ்கிறது. மேலும் குழந்தைகளைப்பெற்று அவர்களைச் சமூகத்தில் சிறந்தபிரசைகளாக்குவதும் இத்தேவதிரவிய அனுமானத்தால் வற்புறுத்தப்படுகிறது.

**நோயாளிகளை அபிஷேகஞ் செய்யும்** நோயில் பூசுதல் என்ற தேவதிரவிய அனுமானமும் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடையதொன்றாக விளங்குகிறது. "உங்களில் எவனும் நோயுற்றிருந்தால் அவன் குருக்களை அழைப்பித்து அவனுக்காகச் செபம் பண்ணுவிக்கட்டும்" இத்தேவதிரவிய அனுமானத்தில் விசுவாசத்துக்கும் செபத்துக்கும் முக்கிய இடமளிக்கப் பட்டிருக்கிறது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**குருத்துவம்** என்ற தேவதிரவிய அனுமானமும் சமூகத்தில் முக்கிய இடம வகிக்கிறது. சமூகத்தினரால் சமூகத்துக்காக ஒருவர் குருநிலைக்குத் தெரிவுசெய்யப்பட்டு அபிஷேகஞ் செய்யப்படுகிறார். அவர் சமூகத்திலுள்ள மக்களின் நன்மைக்காகத் தமது கடமைகளைத் தினமும் செய்துவர வேண்டியவராயிருக்கிறார். இத்தகைய சமூக அடிப்படையில் தற்போது திருவழிபாடு நடைபெறுவதே இத்துறையில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி எனலாம்.

# பரமனின் பார்வையில்

வரி அறவிடுவோரைத் தாழ்ந்தோரெனத் தள்ளிவைத்துப் பாவிகள் எனப் பகைத்தார்கள் பரிசேயர்—ஆனால்! பாரைப் படைத்த பரமன், பாசங்கொண்டழைத்தார் தம் அரும்பணிக்கு அவர்களில் ஒருவரான மத்தேயுவை. பார்த்த பரிசேயரின் உள்ளம் பொங்கியது—உதடுகள் படபடத்தது. தம்தாய்நாட்டை—தம் மக்களை, வாட்டி வருத்தி, வரி அறவிட்டு, அன்னிய அரசனுக்குப் பணிபுரியும் தேசத்துரோகியை, நம் ஆண்டவரும், மீட்பரும் என்று வந்தவர் அழைக்கவா? அவர்களுடன் விருந்துண்பதா? என்று முணுமுணுத்தனர். உள்ளத்தின் குமுறலை அடக்க மாட்டாமல் சீடர்கள்மேல் சீறி, "உங்கள் போதகர், ஆயக்காரரோடும் பாவிகளோடும் உண்பதேன்"? மத். 9-11 என்றார்கள்—பாவிகள்மேல் பரிசேயரின் கண்ணோட்டம் இவ்வாறிருந்தது.

ஆம், மனித இயல்பே அது. வெளித்தோற்றம், செயல்களைக் கண்டு ஒருவரின் தகுதியைக் கணிக்கிறது உலகம். இக்கண் கொண்டுதான் அன்றோ, மத்தேயுவைத் தேசத்துரோகி எனக் கணித்தனர் பரிசேயர். மத்தேயு பாவி — தாழ்த்தப்பட்டவர் — இப்புனித பணிக்குத் தகுதியற்றவரெனப்பட்டது பரிசேயர் பார்வைக்கு. உண்மைதான். இறைக்கண் கொண்டு பார்த்தால் புனித பணிக்கல்ல, இறைமகன் என்னும் பேற்றுக்கே அருகதை அற்றவர். மத்தேயு மட்டுமன்று பார்த்தவரைப் பாவிகளெனப் பறைசாற்றும் பரிசேயர் முதற்கொண்டு, பாரில் படைக்கப்பட்ட மானிடர் அனைவருமே.

இறைமகனின் இயல்பு!

இறைமக்களின் இயல்பை இயம்பினார் இறைமகனார். "என்னிடத்தில் பாவமுண்டென உங்களில் யார் எண்பிக்கக்கூடும்?" (அரு. 8-46) என்று சவால் விடுகின்றார் இறைமகனெனப் பெருமை பேசிய பரிசேயரிடம்.—**அவரிடம்:** தன்னலமற்ற பரம அன்பு விளங்கியது—தூய்மை குடிகொண்டிருந்தது.—**நம்மிடம்:** நான் வாழவேண்டும்—குடும்பம் சிறக்கவேண்டும், பிள்ளைகள் பிழைத்தால் போதும். அயலவன் ஆண்டியானாலும் அக்கறையில்லை—ஆனால்! அல்லலுறும் அவனின் நிலைகண்டு—ஆனந்திக்கிறேன்.—உயர்வைக் கண்டு—துயருறுகிறேன். இதுவா இறை மகனின் இயல்பு?—தம்மிடம் மாசு இல்லை என்றார் இறைமகன் யேசு. அதே வார்த்தை உரைக்க என் நா எழுமா? நம் பாவத்தின் வகையும், தொகையுந்தான் என்னே! நினைக்கவே நிலைதடுமாறும் நாம், இறை மக்களெனப் பெருமை பேசுவது எவ்வாறு? ஆக்கியோனை அவமதித்த அக்கிரமிகள் நாம், தாய்நாட்டை அன்னியர்க்கு அடிபணியவைத்த தேசத்துரோகிகள், அதைவிட அளவற்றவிதமாக தேவனை மறுத்து பாவத்தைச் செய்த தேவதுரோகிகள். பரமனின் கண்கொண்டு பார்த்தால் நாம் யாரெனப் புரியும். கடவுள் பிள்ளை எனத் தகுதியுண்டா? இல்லையா!

பரமனின் பார்வை!

மத்தேயுவை எல்லை தாண்டிய இரக்கங் கொண்டு பார்த்தார் பரமன். மனிதன் பாவி — பலவீனன்—இறைமகனாகத் தகுதியற்றவன். அப்படிப்பட்டவனை அன்பாக அழைக்கிறார்—அணைக்கிறார் அண்ணல் கிறீஸ்து. அவரின் ஒப்பற்ற பண்புதான் என்னே! சகோதரனில் ஒருவன், எனக்குப் பிடிக்காத செயல் ஒன்று செய்தால்—கடும் வார்த்தை ஒன்று உரைத்தால்! என் உள்ளத்தின் நிலை என்ன? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்." அன்பினால் தம்வசப் படுத்துகிறார் மத்தேயுவை. பாவத்தை மறைத்துப் பரமனின் பிள்ளையாக்குகிறார்—ஆனால் கட்டாயத்தாலல்ல—தம் அழைப்பை அவர் ஏற்றதன்பயனாக. இறை மகனாக்கியதுமட்டுமா? தமக்குப் பதிலாகத் தம்பணியை, தொடர்ந்து செய்யும் உன்னத பதவியை, பொறுப்பை அளிக்கிறார். பாவி நம்மையும் தம் அன்பு மக்களாக்க விழைகிறார்—தம் இன்பத்தில் இன்புற அழைக்கிறார்.—தன்னலத்தை மறுத்து ஆண்டவர் அழைப்புக்கு இசைந்த மத்தேயுவைப்போல நாமும் செய்ய வேண்டும், கடவுள் விரும்புவதை எம் வாழ்வில் செய்யத் தயாராகவேண்டும். அப்போது அவர்தம் இருகரம் நீட்டி அணைத்துக்கொள்வார். அன்பு மக்களாக்குவார். தம் இன்பத்தைச் சுவைக்கும் பேற்றைத் தருவார். தம் பணிக்கும் உன்னை அழைக்கலாம்.

சி. பங்கிராஜ்

## அன்பர் அரங்கம்

| | |
|---|---|
| நிகழிடம் : | டி மொன்போட் மண்டபம் |
| நாள் : | **15-4-69** செவ்வாய் |
| நேரம் : | பி. ப. **5—00** |
| பொருள் : | அரசியல் சமூகமும், திருச்சபையும். |
| பேச்சாளர் : | திரு. எஸ். எவ். அல்போன்சஸ், B. A. |

# வண. பிலிப்பு நீக்கிலாஸ்....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

டுவதில் ஓர் இளஞ் சிங்கம் போலக் காணப்படுவார். திருமடுப்பதியிலே அக்காலத்தில் நடைபெற்ற தர்க்கப் பிரசங்கங்களிலே முக்கிய பங்கெடுத்து வந்தார். அவர் உயர்ந்த மரபிலே பிறந்தவராயினும் இயல்பிலே சாதிபேதமின்றி பிறரின் வாழ்வு தாழ்வில் சிறப்பாகக் கலந்துகொள்ளும் சீரிய வழக்கமும் எப்போதும் சுறுசுறுப்பான சுபாவமுமுடையவர்.

"அவர் பவுல் அப்போஸ்தலரைப் போன்று விடாப்பிடியாகத் தொண்டாற்றும் அப்போஸ்தலர். பவுல் அப்போஸ்தலரைப் போல் மலையே போன்று எதிர்கொண்டு வரும் எத்தகைய கஷ்டங்களையும் தலை கொடுத்துத் திடசித்தத்துடன் மேற்கொண்டு செயலாற்றும் தீரம்வாய்ந்தவர்" என்று அன்றொரு நாள் பெரிய பிரசங்கியார் ஒருவர் சுவாமிகளைப்பற்றி எடுத்துக்கூறிய சம்பவமும் எமது ஞாபகத்துக்கு வருகிறது. அவருடைய விளையாட்டுத் திறமையைப்பற்றியும் பலர் நன்கறிவர்.

இப் பெரிய குரவர் இன்று எங்கள் மத்தியில் இல்லை. 57 வருடங்களாகத் தமது வறுமை, அமைச்சல், கற்பு என்ற புண்ணியங்களாலும் தணியாத ஆத்ம இரட்சணிய தொண்டாலும் இளைஞர்களின் கல்விச் சேவையாலும் தாம் சேவித்துவந்த அமலனின் பாதங்களை அண்டிப் போய்விட்டார். அவருடைய சீரிய வாழ்வு எங்களுக்கு ஓர் உத்தம வழிகாட்டியின் வாழ்வாக அமைகிறது அன்றோ!

"அவருடைய ஆத்துமம் நித்திய இளைப்பாற்றியை அடைவதாக" என்று தினமும் மன்றாடுவது எம் நன்றிக்கடனாயிருக்கிறதே.

● யூதர்களின் ஒரேயொரு இராச்சியமாக உலகில்இருந்து வருகின்ற இஸ்றவேல்நாட்டின் புதியபிரதமராகத் திருமதி கோல்ட் மியர்எனும் 70வயதுடையபெண் தெரியப்பட்டிருக்கிறார். இவர் அந்நாட்டு தொழிற்கட்சித் தலைவியும் முதலாவது பெண் பிரதமருமாவர்.

வாழ்விற்கு வழியளித்த வள்ளலே வருக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைத்தையும் அளித்தவர் ஆண்டவரே

## அகங்காரம் ஏனோ மனமே!

மன அமைதிக்கு ஒரு மகத்தான மருந்து தாழ்ச்சியாகும். உன்னைப்பற்றி ஒருபோதும் கதைக்காதே; வைபவங்களில் முதலிடத்தை உனக்கு நீதானே தேடிக்கொள்ளாதே; உனது கருமம் ஆகுவதற்காக மட்டும் பிறரைப் பிரயோசனப்படுத்தாதே. நீ மற்றவர்களைவிட மேலானவன் என்ற எண்ணத்தினால் மற்றவர்களின் மேல் மேலாதிக்கம் செலுத்த எண்ணாதே.

மேலே கூறிய இக் கருத்துக்கள் தாழ்ச்சி என்னும் இப் புண்ணியத்தை விவரிக்கும் பொதுவான கருத்துக்களாகும். ஆனால் தாழ்ச்சி இதைவிட ஒருபடி அதிகமானது. மற்றவர்களுக்கு முன்னால் தன்னைத்தானே தாழ்த்திக்கொள்வதில் மட்டும் உண்மையான தாழ்ச்சி அடங்கவில்லை. அப்படியானால் தாழ்ச்சியின் உண்மையான இருப்பிடம்தான் என்ன என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய ஒன்றுமில்லாமையை உண்மையாக உணர்வதில்தான் உத்தம தாழ்ச்சி அடங்கியிருக்கிறது. நம்முடைய திறமை, நம்முடைய பலம், நம்முடைய அறிவு இவையனைத்தும் ஆண்டவனிடமிருந்து நாம் பெற்றவை. அவருடைய அதி வல்லமையின் முன் நம்முடைய ஆற்றல்கள் அற்பம் என்று சொல்வதற்குக்கூட இல்லை. அப்படியானால் நாம் அகங்காரம் கொள்வது எவ்வளவு அறியாமை.

மனிதன் தாழ்ச்சியின்றி பிறருக்கு மேலாகத் தான் உயர்ந்தவன் என்று இறுமாப்புக் கொள்ளக் காரணம் என்ன? கடவுளின் மகத்துவத்தை உணராததே காரணமாகும். ஒன்றுமில்லாமையாகிய தன்னை மிக மிக உயர்வாக எண்ணுவதால் எல்லையற்ற பரம்பொருளின், நிகரற்ற பெருமையை மனிதன் மறந்து விடுகிறான். எந்தவொரு சாஸ்திரத்தைப்பற்றியும் எவ்வளவு குறைவாக ஒருவன் அறிந்திருக்கிறானோ அவ்வளவு குறைவாக அச் சாஸ்திரத்தின் ஆழத்தையும் அகலத்தையும் மதிப்பிடுவான். பதினொன்று வயதில் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையைப் பாஸ் பண்ணும் ஒரு சிறுவன் தான் எல்லாவற்றையும் கற்றறிந்துவிட்டதாகவே எண்ணுகிறான். அவனே பத்து வருடங்களுக்குப் பிறகு கலைமாணிப் பட்டம் பெற்றவுடன் தான் இன்னும் கற்கவேண்டியது எவ்வளவோ உள்ளது என்பதை உய்த்து உணர்கிறான். அவ்வாறுதான் கடவுளைப்பற்றியும் நாம் எவ்வளவு குறைவாக அறிந்திருக்கிறோமோ அவ்வளவு அவரின் வல்லமை நமக்குக் குறைவாகத் தோற்றும். மறுபக்கத்தில் நம் ஆற்றல், அறிவு முதலானவை அதிகமாகத் தோற்றும். நாம் கடவுளைப்பற்றித் தியானிக்காததால், கடவுளைப் பற்றி அதிகம் அறியத் தெண்டிக்காததால் நமது சுயகலம் நம்மை ஆட்கொள்ளுகிறது. அகங்காரம் அறியாமையின் குழவி என்றால் தாழ்ச்சி அறிவின் குழவி எனலாம்.

அகங்காரமுள்ள மனிதன், தன்னைத் தன் உண்மை நிலைக்கும் மேலானவன் எனக் கருதுகிறான். மற்றவர்கள் தன்னைக் குறைகூறின அதற்குக் காரணம் அவர்கள் தன்மேல் பொறாமைப்படுவதுதான் என எண்ணுகிறான். ஆனால் தாழ்ச்சியுள்ள மனிதன் தன் நடத்தையை, கடவுளின் நன்மைத்தனம் அல்லது அவரின் ஆன்மீகச் சட்டம் முதலானவைகளுடன் ஒப்பிடுகிறான். இதனால் தன் நீசத்தன்மையை உணர்கிறான். ஆம் கிறிஸ்துநாதரும், "உங்கள் பரம பிதாவைப்போல் உத்தமராக இருங்கள்" என்று சொன்னாரேதவிர உங்கள் அயலவனைப்போல் உத்தமனாக இருங்கள் என்று சொல்லவில்லையே. ஆம் எத்தகைய ஒரு புண்ணியவானும் கூட தன் அயலவனுடன் தன்னை ஒப்பிடும்போதுதான் மேலானவனாக உயர்த்தப்படுகிறான். மற்றவர்கள் வெளிப் பார்வைக்கு எவ்வளவு கூடாதவர்கள் என்று கணிக்கும்போது ஒருவன் தன்னைத்தானே உயர்த்தப்பார்க்கிறான். உத்தமர்களின் வாழ்க்கையைக் கண்டு பாவிக்கவேண்டுமேதவிர குறைபாடுகள் மிக்கவர்களின் வாழ்க்கையைக் கொண்டு நம புண்ணியத்தை அளவிடக் கூடாது. புளூடார்க் என்ற அறிஞன் கூறிய வார்த்தைகள் தாழ்ச்சியை அடைந்துகொள்ள எண்ணுபவர்களுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும். "பெரியார்களின் புண்ணியங்கள், என்னுடைய வாழ்க்கையை அலங்கரித்துக்கொள்ளுப் நவின (முகம் பார்க்கும்) கண்ணாடியாகின" என்றான் அவ்வறிஞன்.

தாழ்ச்சியின்மைக்கு இன்னோர் காரணம் உண்மை அறிவின்மையாகும். நமது அறிவெல்லாம் கடவுளால் கொடுக்கப்பட்டது என்பதை உணர்பவன் எவ்வாறு தன்னை உயர்வாக மதிப்பிட முடியும். 'எவனுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவரிடமிருந்து அதிகமாகக் கேட்கப்படும்' என்ற வார்த்தையின் கனத்தை உணர்பவன் எவ்வளவு தாழ்மையாக இருப்பான்! அறிவுசான்ற அறிஞனின் கடமை மிகப் பெரிது. அவன் தன் ஆழ்ந்த அறிவால் இளைஞருடன் ஏனையோரையும் தக்க வழியில் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். அவன் இக் கடமையில் தவறி அகங்காரம் மிக்கவனாக மாறினால் ஐயோ எவ்வளவு மதியீனம்!

நம்மிடம் உள்ளது, நமக்குத் தெரிந்தது, நாம் செய்வது எல்லாவற்றையும் 'தெய்வீக ஞானத்துடன்' ஒப்பிடின் நமது ஒன்றுமில்லாமை எவ்வளவு என்பது விளங்கும். கடவுளின் குறைவற்ற நிறைந்த அறிவின் முன் நமது அறிவு எங்கே! நமது மேன்மையெல்லாம் நமது அதிர்ஷ்டம் குறைந்த சகோதரர்களோடு ஒப்பிடும் போதுதான். நாம் இறைவனிடம் பெற்றுக்கொள்ளாதது ஏதேனும் உண்டா? அப்படியானால் ஒன்றையுமே பெற்றுக்கொள்ளாதவர்களைப்போல் அகங்காரமும் வீண் சலாக்கியமும் கொள்வதுதான் ஏனோ?

சகோதரர்

S. A. I. மத்தியூ, s. s. j.

# அன்பின் அழைப்பு

படிப்பை நிறுத்தி விட்டுப் பதவியை எதிர் நோக்கிய வண்ணம் இருந்தேன். ஒரு நாள் காலை வீட்டின் தலைவாசலில் கிணீரென்ற மணியோசை கேட்டது. விரைந்து சென்றேன். யாருமல்ல, தபால்காரன்தான். அவன் கடிதத்தை நீட்டினான். வாங்கி ஆவலுடன் படித்துப் பார்த்தேன். அது கொழும்பில் வேலை பார்க்கும் என் நண்பர் ஒருவரின் அழைப்புக் கடிதம். பதவியை எதிர் நோக்கிய எனக்குப் பதவியைப் பெற்றுத்தர அழைக்கும் அழைப்புக் கடிதம். அதனால், என் பெற்றோர், உற்றோர் உறவினரைப் பிரிந்து, நண்பரில் நம்பிக்கை வைத்து, அங்கரை நாடிச் சென்றேன். பதவியும் பெற்றேன்.

இதுபோன்றே மண்ணுலகில் மனுவுருவெடுத்த அனைவரும் அவனவன் செய்தொழிலுக்கு அழைக்கப் பெற்றிருக்கின்றான். ஒருவன் ஆசிரியனாய் இருப்பதுவும், மற்றொருவன் விவசாயியாய் இருப்பதுவும், வேறொருவன் வியாபாரியாய் இருப்பதுவும் அவனவனுக்குரிய சிறப்பான அழைப்பே. இதைவிட இவ்வுலகிலே "திருமண அழைப்பிதழ்," "புதுமனை புகு அழைப்பிதழ்" போன்ற பல அழைப்பிதழ்களும் உண்டு.

### ஒரு குடும்பத்திற்கு:

இவற்றைவிட மேலான அழைப்பு-உன்னத அழைப்பு நம் ஒவ்வொருவரையும் நாடி வந்துகொண்டே இருக்கிறது. ஆதியிலே இறைவன் ஆபிரகாமை நோக்கி: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டப்போகிற தேசத்திற்குப்போகக் கடவாய். நாம் உம்மைப் பலுகச்செய்து, ஆசீர்வதித்து, மகிமைப்படுத்துவோம்" என்றார் (ஆதி 12/1-2). ஆபிரகாமோ பதில் ஒன்றும் பேசவில்லை. கடவுளின் அழைப்புக்கிணங்கி, ஊர் தேசத்தைவிட்டுத் தன் குடும்பத்துடன் வணங்கிவராஇயாய் அலைந்தார். எங்கு அழைத்தபோதிலும், எவ்வ இடையூறுகள் ஏற்பட்டபோதிலும், விசுவாசத்தினால் தூண்டப்பட்டு, கடவுளை நம்பிச் சென்றார். அவர்மூலமாக அவர் குடும்பமே அழைக்கப்பட்டது.

### ஒரு குலத்திற்கு:

ஆபிரகாமின் குடும்பம் பலுகிப்பெருகியது. அது ஒரு குலமானது. அக்குலத்தை இறைவன் அழைத்தார். அது இறைமக்கள் — இஸ்ராயேல் குலம் என அழைக்கப்பெற்றது. இஸ்ராயேல் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால், அம்மக்கள் தம் உயிரைக்காப்பாற்ற எஜிப்துக்குச் சென்றார்கள். அங்கு அக்குலம் அடிமைத்தனத்தில் அவதியுற்றது. எனவே, அடிமைத்தனத்தில் நின்று விடுவிக்க— வாக்குத்தத்த நாட்டிற்கு வழிநடத்திச் செல்ல, இறைவன் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. கர்த்தரோ எரிமுட்செடியில் மோயீசனுக்கு தரிசனையாகி, 'வா! இஸ்ராயேல் புத்திரராகிய நமது சனத்தை எஜிப்தில் நின்று புறப்படும் பொருட்டு உன்னைப் பாரவோனிடத்திற்கு அனுப்புவோம்" என்றழைத்தார் (யாத். 3/10). மோயீசனோ அதற்குத் தகுதியற்றவர் எனக் கண்டாலும் கடவுள் கட்டளைக்குப் பணிந்தார். நம்பி அழைப்பை ஏற்றார். வழிநடத்திச் சென்றார்.

### நடுவருக்கு:

இஸ்ராயேல் குலம் ஒரு பெரும் அரசானது. அவர்களைத் தொடர்ந்து வழி நடத்த நடுவர்களை ஏற்படுத்தினார். இவர்கள் காலத்தில் ஒரு சமயம் மதியானித்தருக்கும் இஸ்ராயேலருக்கும் கலகம் உண்டானது. அதிலிருந்து இஸ்ராயேலரை மீட்க, மனிதரில் மிக்கபலம்வாய்ந்த சம்சோன் என்பவரை நடுவரில் ஒருவராக அழைத்தார். தம் மக்களை மீட்டார். இப்படிப் பலநடுவர்கள் மூலம் இறைவன் தம் மக்களை ஆண்டு நடத்தி வந்தார்.

### அரசருக்கு:

மக்களோ இறைவனின் ஆளுகையை வெறுத்தனர். பக்கத்து நாடுகளைப்போல, தங்கள் நாட்டிலும் ஓர் அரசன் தான் தங்களை ஆளவேண்டும்; அவன்தான் நியாயம் தீர்க்கவேண்டும்; நடுவர்கள் வேண்டாம் எனப் பிடிவாதமாய் நின்றனர். இறைவனும் அவர்களுக்கு ஓர் அரசனை ஏற்பாடு செய்தார். பலர் அரசர்களாக அழைக்கப் பெற்றனர். அவர்களிலே தாவீது அரசரும் ஒருவர்.

### இறைவாக்கினருக்கு:

அரசர்களும் மக்களும் கடவுள் கட்டளைகளை மீறினர். நெறிகெட்டவர்கள் ஆயினர். அவர்களை விடுவிக்க—நல்வழிப்படுத்த, புனிதரான போதகர்களை—இறைவாக்கினரை (தீர்க்கதரிசிகளை) அனுப்பினார். அவர்கள் வந்து, மக்களுக்குத் தம் குற்றங்களை எடுத்துக்காட்டினர். அதற்காகத் தவம் செய்து கடவுளை மன்றாடவும், வரப்போகிற உலகமீட்பரைப்பற்றியும், அவருடைய வருகைக்காக ஆயத்தம் செய்து காத்திருக்கவும் கற்பித்தனர்.

### இறைப்பணிக்கு:

காலம் வந்தது. கடவுள் தாம் வாக்களித்தபடி தம் ஒரே மகனை இவ்வுலகுக்கு அனுப்பினார். அவர் தம் வார்த்தையினாலும் வாழ்க்கையினாலும் மண்ணவர்க்கு விண் வழி காட்டினார். அப்பணியைத் தொடர்ந்து புரிய பன்னிருவரைத் தம் சீடராக அழைத்தார். அவர்களுக்கு மூவாண்டுகள் இறையியல் புகட்டி, இறைப்பணிக்குத் தயார்செய்தார். விண்ணகம் செல்லுமுன் தான் கொண்டுவந்த நற்செய்தியை உலகெங்கும் பரப்பப் பணித்தார். அக்கட்டளையின்படி அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்களான பாப்புமார், மேற்றாணிமார்களையும், அவர்களுக்குத் துணைவர்களாகக் குருக்களையும் இறைப்பணிக்கு அழைக்கின்றார். இக்காலத்தில் சிறப்பாக இல்லறத் துறவர்களையும் அழைக்கின்றார். அதற்கு உன் பதில்.

— அ. மார்சலின் —

## கடவுள் என்னோடு

நம் கோரிக்கைக்கு
கடவுள் செவிசாய்க்காமல் இருந்ததை
நான் பார்த்ததில்லை.
சிறைச்சாலையிலே,
என் போராட்டங்களின் மத்தியிலே,
நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில்,
அவர் கைக்கு எட்டும்படியாக
வெகு சமீபத்தில் இருந்ததை
நான் கண்டிருக்கிறேன்.
ஒரு நிமிஷ நேரம்கூட
என் வாழ்க்கையில்
கடவுள்
என்னை விட்டு அப்பால் போனதாக
எனக்கு ஞாபகமில்லை.

— மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Christianity—Advanced Level (G. C. E.)**

# இரட்சணிய சரித்திரம்

## திட்டத்தின் ஆரம்பம்

( முன் தொடர்ச்சி )

இவனது பங்கு இருமடியானது. ஏனெனில், அரசன் இறைவனிடத்தில் மனிதனின் பிரதிநிதியாவான். மறுபுறத்தில் இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பாலமாக விளங்கினான். ஒருபக்கத்தில் தேவனிடமாக இருந்து நீதியான ஆட்சி, செல்வாக்கு, ஆதரவற்றோருக்குப் பாதுகாப்பு என்னும் தொண்டுகளைப் புரிந்தான். இவன் மூலமாகத் தேவன் தமது மக்களுக்கெனத் தாம் வகுத்திருந்த உன்னத திட்டத்தை நிறைவேற்றினார். இதிலேயே அரசனது முக்கியத்துவம் அடங்கியிருந்தது. இவன் மூலமாகவே இறைவன் தமது உடன்படிக்கையை நிறைவேற்றுவார். கடவுள் தமது மக்களுக்கு வாக்குப்பண்ணிய உன்னத இலட்சியமானது அரசன்மூலமாகவே நிறைவேற்றப்படும். மறு பக்கத்தில் இந்த அரசனானவன் மக்களின் பிரதிநிதியாகவும், மக்களுக்காகப் பரிந்து பேசுபவனாகவும் விளங்கினான். இவனே இறைவனின் சகாயத்தையும், அவரது உடன்படிக்கையின் நிறைவேறுதலையும் தேவனிடமிருந்து கோருபவன். இப்படிப்பட்ட ஒருவனே இஸ்ரயேலின் இலட்சிய அரசனாவான். அரசனுக்கிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட குணசீலப் பண்புகள் கீழைத் தேசத்தில் அக்காலத்திலிருந்த அரசர்களிடம் எதிர்பார்க்கப் பட்டவையாகும். இவன் மூலமே தமது உடன்படிக்கைகள் நிறைவேறுமென்று இஸ்ரயேல் மக்கள் நம்பினர். தேவன் எப்பொழுதும் மக்களுக்கு விளங்கக் கூடிய வழிவகைகளைக் கருவியாகக் கொண்டே அவர்களுடன் சம்பாஷிக்கின்றார். தனது தீர்க்கதரிசிகள்மூலம் ஓர் உன்னத எதிர்காலத்தை அவர்களுக்கு வாக்குப்பண்ணினார். வரவிருக்கும் மெசியாவும் இத்தகைய ஓர் இலட்சிய அரசனாக இருப்பாரென்றே யூதர்கள் எண்ணினர்.

யூத வரலாறு ஆரம்பமானதும் அரசரின்பின் அரசர், ஒருவர்பின் ஒருவர் சிம்மாசனமேறிய போதிலும் எதிர்பார்க்கப்பட்ட இலட்சிய அரசன் தோன்றவேயில்லை. ஒவ்வொரு இளவரசனது பிறப்பின்போதும் அவனே இலட்சிய அரசன் என்ற ரீதியில் அவன் மீது கவிதைகள் புனையப்பட்டன. ஆனால், ஒவ்வொரு முறையும் இந்த நம்பிக்கைகள் யாவும் வீணாயின. இலட்சிய அரசன் ஒருவன் தோன்றுவதற்கு அரசனும் மக்களும் இறைவனின் சட்டத்தின்படி நடத்தல் ஒரு முக்கிய நிபந்தனையாகும். ஆனால், யூத அரசர்களும், மக்களும் தங்கள் அயலாரின் துர்க்குணங்களைப் பின்பற்றினர். அத்துடன் விசேஷமாக ஒப்பற்ற ஏக தேவனின் வழிபாட்டை அலட்சியம் செய்தனர். ஒரேயொரு கடவுளை வழிபடவேண்டுமென்பதை உலகிற்குப் போதிக்கும்படியாகவே கடவுள் இஸ்ரயேல் மக்களைத் தேர்ந்தெடுத்தார். சகலத்தையும் படைத்தவர் கடவுளே என்பதை ஏற்றுக்கொள்ளாத ஒருவன் எந்த உண்மையையுஞ் சரிவரக் கண்டுகொள்ள முடியாது; அறிவுடன் வாழமுடியாது. ஆகவே, மனிதப் பிறவியாக வாழவே முடியாது. இவ்வுண்மையை உலகுக்கு அறியச்செய்யவே இறைவன் யூதமக்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால், அவர்கள் அதை நிறைவேற்றத் தவறிவிட்டனர். உடன்படிக்கையிற் தமக்குரிய பகுதியை நிறைவேற்ற அவர்கள் மறுத்துவிட்டனர்.

உண்மையில் யூத இராட்சியம் முழுவதும் சீர்குலைந்தது. பாவாக்கிரமம் எங்கும் தலைவிரித்துத் தாண்டவமாடியது. அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்த தீர்க்கதரிசிகளுக்கும் யூதர்கள் செவிசாய்க்கவில்லை. "தேவனுடைய சட்டங்களை அனுசரித்து அவர் பக்கமாகத் திரும்புங்கள்; உங்கள் தீய வழிகளை விட்டுவிடுங்கள்; உங்கள் நம்பிக்கை யாவும் வீணாவதுடன், உங்களது இராட்சியமும் பறிமுதல் செய்யப்பட்டு, நீங்களும் அடிமைகளாக்கப் படுவீர்கள். நீங்கள் மனந்திரும்பாவிடில் நீங்கள் எதிர்பார்க்கும் இலட்சிய அரசனைக் காணமாட்டீர்கள்" என்று அடிக்கடி செய்தி விடுத்தனர். இத்தீர்க்கதரிசிகளை யூதர்கள் அறிவிலிகளென்று கருதி, ஒறுத்தனர்; அல்லது அவர்களைக் கொன்றனர்; அன்றேல், பரிகசித்தனர். ஆனால், இவர்கள் முன்னறிவித்தபடியே கி.மு. 587 இல் ஜெருசலேம் வீழ்ச்சியுற்றதுடன், யூதர்களும் சிறைபிடிக்கப்பட்டு அந்நிய தேசத்துக்குத் தேசாந்திரிகளாகக் கொண்டுபோகப் பட்டனர். மகத்தான எதிர்காலம் ஒன்றினை எதிர்நோக்கிய இனத்தினர் தாம் சிதறுண்டு அழிவில் ஆழ்ந்திக் கிடப்பதைக் கண்ணுற்றனர். யூதேயாவிற் தங்க அனுமதிக்கப்பட்டவர்கள் தமது எதிரிகளுக்குப் பணிந்து வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களுட்பலர் எகிப்துதேசத்திற் சிதறுண்டு வாழவேண்டியிருந்தது. முப்பதினாயிரம்பேர் பபிலோனியாவுக்குக் கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்டனர். இஸ்ரயேல் மக்கள் ஓர் இனமென்ற முறையில் சரித்திரத்திலிருந்து மறைந்துவிட்டனரென்றே தோன்றியது. தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட யாவும் நிறைவேறுவதைக் கண்ட இஸ்ரயேல் மக்கள் இறைவனின் செயலையும், வல்லபத்தையும்பற்றிச் சிந்திக்கலாயினர். அவர் காலம் உருண்டோடச் செய்கின்றார். ஆனால், அவர் எப்போதும் பிரசன்னராய் இருக்கிறார். ஈற்றில் தண்டிப்பதற்காகவோ அன்றேல் சம்பாவனையளிப்பதற்காகவோ செயலாற்றுகின்றார். தேவனின் செயலானது இவர்களைச் சிந்திக்கச்செய்தது. தேவனே உலகத்தின் மையம். எனவே, அன்புள்ள ஒரு தந்தைக்குக் கீழ்ப்படிவதுபோல அவருக்குப் பணிந்துநடப்பதே நலமெனக் கண்டனர். ஆகவே, அவர்கள் தேவன் பக்கமாக மீண்டுந் திரும்பினர். இது அவர்களது வரலாற்றின் ஒரு முக்கிய திருப்பமாகும். அவர்கள் இறைவனை நோக்கிச் செல்லும் பாதையில் அவரும் அவர்களை எதிர்கொண்டு வந்து தம் மக்களைச் சந்திக்கலானார். அவர்களது பிரமாணிக்கவீனத்தினால் எதிர்காலம்பற்றிய அவர்களது நம்பிக்கைகள் பறிபோகவில்லையென்று தமது தீர்க்கதரிசிகள் வாயிலாக அறிவித்தருளினார். அவர்கள் தொடர்ந்தும் தமது மக்களாகவேயிருப்பரென்றும், அவர்களது அறிவீனத்தினால் உடன்படிக்கை நிறைவேறுவது பின்போடப்பட்டிருப்பினும், அது ஈற்றில் நிறைவேறுமென்றும் அறிவித்தார். இதுவரையும் அவர் தமக்கு மட்டுமே தேவன் என்னும் குறுகிய மனப்பான்மை கொண்டிருந்தவர்களுக்கு அவர் ஏனைய சாதியினர்க்கும் தேவனாய் இருக்கிறாரென்ற உண்மை படிப்படியாகப் புலப்பட்டது. அரசனின் மூலமே இறைவனின் ஆட்சியானது உலகத்தில் நிறுவப்படும். ஆகையால் வரவிருக்கும் மெசியா ஒரு லௌகீக மன்னனாயிருப்பாரென்று தவறாகக் கருதினர். உண்மையான ... பெற்றிருந்தவர்களுக்கு அவர் ... அரசாட்சி செய்வாரென்பது புலனாகியது. இவ்விரு கொள்கைகளும் அக்காலத்தில் ... வந்தன.

[வளரும்]




அன்புள்ள தம்பிதங்கையரே வணக்கம்!

எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் நீர் பளிங்கு போலத் தெளிவாயும் சுத்தமாயும் இருக்கும். ஆனால், கட்டுப்பட்ட நீர் அழுகிப் பழுதுற்று குப்பை கூழங்களினால் நிறைந்து போயிருக்கும். சோம்பேறி கட்டுப்பட்ட நீருக்குச் சமானமாவான். அவனுடைய கண்கள் அபாயத்துக்குரிய விஷயங்களை நோக்கியபடியிருக்கும். அவனுடைய மனது கெட்ட எண்ணங்களினால் நிரம்பிப் போயிருக்கும். அவனுடைய இருதயம் காமாதுர இச்சைகளில் நிறைந்திருக்கும். சோம்பல் எவ்வகையான அக்கிரமங்களுக்கும் தாய். அது ஆத்துமத்தில் பசாசு படுத்துறங்கும் தலையணையாகும். எப்போதும் அலுவலாய் இருப்பவனை ஒரு பிசாசு சோதனை செய்யுமிடத்து, சோம்பேறியைப் பார்த்துப் பிசாசுகள் அரிகண்டப்படுத்திக் கொண்டிருக்கும். சோம்பலுக்கிடங் கொடேல்.

அண்ணா.

### கூலிக்காரன்

யோசேப்புவும், மாணிக்கமும் ஒரே பாடசாலையில் படித்தார்கள்; ஒரே வகுப்பில் படித்தார்கள். யோசேப்பு கடவுள்பக்தி உள்ளவன். தினந்தவறாமல் கோவிலுக்குப் போவான். கிரமந்தவறாது பாடசாலைக்குச் செல்வான். பாடங்களைக் கவனமாகப் படிப்பான். நல்லொழுக்கம் உள்ளவன்;

மாணிக்கம் ஒழுங்கு இல்லாதவன். ஒழுக்கம் இல்லாதவன். உற்சாகம் இல்லாதவன். பாடசாலைக்குப் போவதென்றால், படிப்பென்றால் அவனுக்குக் கசப்பு. விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் தன் காலத்தை வீணாக்கி வந்தான்.

பலவருடங்கள் ஓடிமறைந்தன; ஒருநாள் காலை யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்தில் வண்டி வந்து நின்றது. அழகாக உடைதரித்த கனவான் ஒருவர் இரண்டாம் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கினார். கூலிக்காரன் ஒருவனை அழைத்துத் தான் கொண்டுவந்த பொருட்களைத் தூக்குமாறு கட்டளையிட்டார். கூலிக்காரன் சாமான்களைத் தூக்கித் தலையிலே சுமந்து கொண்டு பின்செல்ல அவர் முன்னே சென்றார்.

குழந்தைகளே! அந்தக்கனவான் யார் தெரியுமா? இளமையிலே, தன் காலத்தைப் பொன்னாக மதித்து, திறமாகப்படித்து, இப்போது நல்ல உத்தியோகம் பார்க்கும்யோசேப்பு. அந்தக் கூலிக்காரனைப் பார்த்தீர்களா? அவன் தான் மடையன் மாணிக்கம்; கல்வியின் அருமை தெரியாமல் காலத்தை வீணாக்கி இப்போது கஷ்டத்தை அனுபவிக்கிறான்.

கல்வியால் உயர்வடைந்த யோசேப்பு என்பவரைப்பார்த்து நீங்களும் உங்கள் இளமைக்காலத்தை வீணாக்காது அருமையான கல்வியைத் திறமையாய்க் கற்றுப் பெருமை அடையுங்கள்.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு."

( யாவும் கற்பனையே )

### நிரப்பிப் பாடுங்கள்

பொல்லாங்கு சொல்லுதல் கேடு
பொறுமையாம் புண்ணியங் —
நல்லோர்கள் தம்முன் —
நல்ல பொன் கவிகளைப் —
அன்பிலா வார்த்தைகள் கல்லு
ஆழமாய் யோசித்துச் —
துன்பத்தில் உறுதியாய் —
தூயோர்கள் பாதையிற் —
இளமையில் வறுமையோ தீது
எல்லாம் அழித்திடுஞ் —
பொறுமையே நிறைந்தவன் —
புகழ் தரும் உண்மையே —

யாழ். ஜெயம்.

### விடுதலைகாலத்தில்

தம்பி தங்கையரே! "தம்பி உன்னை நம்பி என்ற கட்டுரையைப்படித்த தங்கையர் சிலர் விருந்து தம்பியர்க்கு மட்டும் தானா, தங்கையர்க்கு இல்லையா? என்று வினாக்களைத் தொடுத்துள்ளனர், எனவேதான் தங்கையரைப்பற்றியும் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

மேலும் இது விடுதலை காலமல்லவா உங்களுக்கு நிரம்ப நேரமிருக்கிறது. உங்கள் விடுதலை நாட்களை எப்படிக் கழிக்கப் போகிறீர்கள். பலர் பெற்றோருடன் வெளியூர் செல்வீர்கள். பலருக்கு வீட்டுவேலைகள். சிலருக்கு ஒரே விளையாட்டு. காலம் (நேரம்) பொன்போன்றது. அதைத் திரும்ப நாம் பெறமுடியாது. எனவே, பயனுள்ள வழிகளில் நம் நேரத்தைப் போக்கவேண்டும். எப்படி நேரத்தைப் போக்குவது என்று பலர் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். சில வழிகளைக் கூறுகிறேன். விடுதலைதானே என்று பள்ளிப்புத்தகங்களை ஒருபுறத்தில் ஒதுக்கிவிடக்கூடாது; பாடங்களைப் படிக்க வேண்டும்.

சிறு கவிதைகள், குட்டிக்கதைகள், விகடத்துணுக்குகள், மூளைக்கு வேலை, புதிர்கள் போன்றவற்றில் நீங்கள் பலே கெட்டிக்காரரல்லவா? அவற்றை விருந்துக்கு எழுதியனுப்பினால் தகுதியானவை பிரசுரிக்கப் படுமல்லவா? இன்னும் வீட்டுக் காய்கறித் தோட்டம், முத்திரை, படம் சேகரித்தல், போன்ற பொழுதுபோக்குகளையும் செய்யலாமல்லவா? நல்ல நூல்கள் வாசித்தல், பத்திரிகை படித்தல், வானொலி கேட்டல் இவற்றையும் விடக்கூடாது.

எப்படி விடுதலை நாட்களைக் கழிக்க வேண்டும் என்பது இப்போது தெரிகிறதல்லவா? எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்.

இ. பேர்னட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச் சிலுவையும் திருமேனித் துகிலும்— சாமுவேல் பெனடிக்ற்

ஓவியர்களின் சித்திரங்கள் யேசுநாதர் திருச்சிலுவையை முழுமையாகவே சுமந்து சென்றதாகச் சித்திரிப்பதைக் காண்கிறோம். திருப் பாடுகளின் காட்சிகளிலும் நாடகங்களிலும் இவ்விதமே காண்கிறோம். உரோமைய வரலாறுகள் மரணதண்டனை பெற்ற குற்றவாளி சிலுவையின் குறுக்குப்பகுதியை மட்டுமே தனது தோளில் சுமந்துசெல்வானெனக் கூறுகின்றன.

யேசுநாதர் எவ்விதம் சுமந்தார்? எத்தோளில் சுமந்தார்?

## பரிவட்டத்துணியின் கூற்று

பரிவட்டத்துணியின் பிரகாரம் கிறிஸ்துவின் இருதோள்களிலும் காயத் தழும்புகள் காணப்படுகின்றன, அவை கசையடியால் உண்டானவை. வலதுதோளில் மிக ஆழமான காயம் ஒன்றுண்டு. இந்தத் துணிக்குரிய மனிதர் பாரமானவொரு பொருளைச் சுமந்து சென்றது சந்தேகமில்லாமல் நிரூபிக்கப்படுகிறது. அதுவும் வலதுதோளில்தான் என பேராசிரியர் போல்விக்னேன், டாக்டர் பார்பட் எனுமிருவரும் கூறுகிறார்கள்.

ரயில்வே சிலிப்பர்க்கட்டைகளில் பாரமானதொன்றைத் தோளில் சுமத்திச் செய்த பரிசோதனைகள் குறுக்குமரத்தைமட்டும் சுமப்பதால் இப்பெரும் காயம் உண்டாகாது எனக் காட்டுகிறதென இவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பேராசிரியர் யூடிக்காகோர்டிகிலியாவும் இதை ஏற்றுக்கொள்ளுகிறார். யேசுநாதர் தரித்திருந்த உள்ளங்கி தற்போது பிரான்சில்ஆர்ஜென்ரியில் கிராமத்தில் இருக்கிறது. அத்துணிக் காயங்களும் இதற்கு ஆதாரமானவை எனக் காட்டுகிறார்.

ஆயின் வேறுசில ஆராய்ச்சியாளர்கள் நாம் ஆரம்பத்தில் கூறிய கருத்தை வலியுறுத்துகிறார்கள். சிலுவையை முழுமையாகச் சுமந்திருப்பாரானல் தோளின் இரு மேற்பக்கங்களிலும் காயங்கள் இருந்திருக்கும் என இவர்கள் வாதாடுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

## சிலுவையில் அறையப்படுதல்

பெரும்பான்மையான ஓவியர்கள் யேசுநாதரின் உள்ளங்கைகளில் ஆணிகள் அறையப்பட்டுள்ளதாகச் சித்திரித்துள்ளனர் இது தவறென்றும் உள்ளங்கையில் அறையப்பட்டிருப்பின் தேகபாரம் கைகளைக்கிழியச் செய்திருக்குமென்றும் மணிக்கட்டுகளுக்கிடையிலேயே ஆணிகள் அறையப்பட்டிருத்தல்வேண்டுமென்றும் மருத்துவ நிபுணர்கள் பலர் முன்பே சுட்டிக்காட்டியிருந்தனர். பரிவட்டத்துணி இவர்கள்கூற்று சரியானதென்பதை எடுத்துக் காட்டுகிறது. இங்ஙனம் அடிக்கப்படும்ஆணி பிரதான சிலநரம்புகளைக் கடுமையாகத் தாக்குவதால் விரல்களும், மூளையும் மிகுந்த வேதனைக்குள்ளாகின்றன. இந்தவேதனை விபரிக்க முடியாதஅளவு பயங்கரமானதென டாக்டர் பார்பட் கூறுகிறார்.

கால்கள் ஒன்றன்மேலொன்றாக வைத்து ஒரேஆணியினல் தைக்கப்பட்டன. சிலர் நான்கு ஆணிகள் பாவிக்கப்பட்டன என்று வாதிப்பதைப் பரிவட்டத்துணி மறுத்துரைக்கிறது. சிலுவையின்மீது வலதுபாதத்தை வைத்து அதன்மேல் இடதுபாதத்தைப் பொருத்தி ஆணியை அறைந்தனர். கால்களை அறையுமுன் ஆணித்துளைக்கு வசதியாகக் கிறிஸ்துவின் உடலை இழுத்து நோக்கியபோது எலும்புகள்பல நொறுங்குண்டிருக்கலாமென மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இரண்டு ஆணிகளின் ஆதாரவில் தேகத்தின் பாரமெல்லாம் முன்புறம் அழுத்தச் சிலுவைமரத்தில் நிற்குமொருவர் சுவாசிப்பது மிகக்கடினமானது. எனவே நமதாண்டவர் தமது சக்தியெல்லாம்கூட்டி இருகால்களின் ஆதாரத்தில் தேகத்தை அடிக்கடி உயர்த்தியிருப்பார். இவ்விதம் ஏழுதடவைகள் உயர்த்தியிருக்கலாமெனவும், அத்தருணங்களிலேயே ஏழு வாக்கியங்கள் கூறப்பட்டனவென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம்தேகத்தை உயர்த்தி சுவாசிக்க முடியாதநிலை வந்தபோது மூச்சுத்திணறி இறந்திருக்கலாமென்பது மருத்துவர்களின் கூற்று.

## ஈட்டிக்காயம் :

தேகத்தை உயர்த்தியும் பதித்தும் சுவாசிப்பவர்கள் சிலுவையில் பலமணிநேரம் இருக்க முடியும். இதனால் அவர்களது மரணத்தைத் தீவிரிக்க, கொலையாளிகள் கணுக்கால்களை முறித்துவிடுவார்கள். கிறிஸ்துவின் உடல்நிலையைக் கொண்டே உயிர்பிரிந்து விட்டதென நம்பப்பட்ட போதிலும் நிச்சயம் செய்வதற்காக ஒருவன் அவரது வலதுவிலாவை ஈட்டியால் குத்தித் திறந்தான். இக்காயம் மேற்பகுதியில் இரண்டரை அங்குல அகலமுள்ளது. கீழே செல்லச்செல்ல விரிந்து ஆறு அங்குலம்வரை அகன்றிருக்கிறது. நமது இரட்சகரின் விலாஎலும்புகள் எதையும் உடைக்காமலே ஈட்டி உட்புகுந்திருக்கிறதெனபரிவட்டத்துணி காட்டுகிறது. இரத்தமும் நிணநீரும் பரிவட்டத்துணியில் உறைந்திருக்கும் முறையைப் பரிசோதனை செய்தோர் உயிர்பிரிந்து சுமார் ஒருமணிநேரத்தின் பின்னர்தான் ஈட்டியால் குத்தப்பட்டதெனக் கூறுகின்றனர்.

இவ்விதமே புதுமைகளை நம்பாதோரும் அவிசுவாசிகளும்கூட யேசுவின் பயங்கர பாடுகளையும், மரணத்தையும், உயிர்த்தெழுகையையும் விஞ்ஞான, மருத்துவ ஆராய்ச்சிகள்மூலம் விசுவசிக்கவைக்கும் அதிசய புனிதபொருளாக ரியுறின் நகரில்உள்ள பரிவட்டத்துணி விளக்கிக்கொண்டிருக்கிறது.

---

# நீர் சர்வேசுரனுடைய சுதனுனல் கீழே குதியும்

— வண. பிதா வே. அன்ரனி ஜோண் —

## சாத்தானின் சவால்

இரண்டாம் சோதனையிலும் தோல்வி கண்ட சாத்தான் மூன்றாம்முறையாக எருசலேமிலுள்ள தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, "நீர் தேவனுடைய குமாரனுனல் இங்கேயிருந்து தாழக் குதியும்" என்றான்.

முதல் சோதனை உடலைச் சார்ந்தது. இரண்டாம் சோதனை புத்தியைச் சார்ந்தது. இப்பொழுது மூன்றாம் சோதனை ஆண்டவருடைய சித்தத்தைச் சோதிக்கிறது. நீர் தேவகுமாரனுயிருந்தால் கீழே குதியும் எனக் கட்டளை கொடுக்கிறான் கொடுங்கோலன். கட்டளை கொடுத்தபின் வேதாகமத்திலிருந்து மேற்கோளும் எடுத்துக் காட்டுகிறான் — பிசாசு. "உம்மைக் குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறுரென்றும், உம்முடைய பாதம் ஒருவேளை கல்லில் இடறுதபடிக்கு அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறது" எனவேதாகம வாக்கியத்தைக் கூறுகிறான் சூதுக்காரன். பசுத்தோல் போர்த்த புலிபோல் நயவஞ்சகன் இச்சோதனையைப் பரிசுத்த வேதாகம வாக்கியங்களால் போர்த்து ஆண்டவரை ஏமாற்றப் பார்க்கிறான். வேதாகம வாக்கியங்களுக்குத் தனது சொந்த விளக்கங்களும் கொடுக்கிறான் சாத்தான். ஆண்டவர் தாம் கடவுளின் மகன் என்று நிரூபிக்கப் பிசாசு ஒரு புதுமை செய்யும்படி கேட்கிறான். கீழே ஆண்டவரைக் குதிக்கச் சொலகிறான். விழுந்தால் ஆண்டவருக்கு எவ்வித ஆபத்தும் வராதாம்—என்கிறான் பொய்யன்.

## கிறிஸ்துவின் சவுக்கடி

"உன் தேவனுகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாக" என்றார் ஆண்டவர். இயற்கையின் கர்த்தர், தரணியின் தலைவன் நான். இயற்கையிலே நான் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டியிருக்கிறேன். நீர் அந்தச் சட்டத்தை மாற்றி உன் விருப்பம்போல் செய்யச் சொல்கிறாய். அது முடியாத காரியம். இப்படி இறைவனின் சித்தத்துக்குப் பதிலாக உம் விருப்பத்தைப் போடுவது பெரிய பாவமாகும்—இறைவனைச் சோதிப்பதாகும். சாத்தானே, அப்பாலே போ. "உன் தேவனுகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாக."

எமது புத்தியும் சித்தமும் சட்டத்தின்கீழ் இருக்கவேண்டும். நவநாகரிக உலகிலே ஒழுங்கீனத்தையும், சட்டத்துக்கு அவமரியாதை கொடுப்பதையும் காண்கிறோம். தன் சித்தமே தன் சட்டம் — தன் விருப்பமே தன் சட்டம்— தன் புத்தியே எல்லா உண்மைக்கும் அளவுகோல். அதிகாரத்துக்கு அமைச்சலின்மை, விசுவாசக்குறைவு இவைகள்தான் இன்றைய நாகரிக உலகின் போக்கு. சட்டத்துக்கும், விசுவாசத்துக்கும் மதிப்பளிப்போம்.

சாத்தானே! உமக்குத் தெரியுமா சட்டம் மயக்குமொழி கேட்டு, கடமையை மறந்து வழிதவறிச்செல்லாது. சட்டம் அறவழியை அழியாது பாதுகாத்துத் தருகிறது. ஆகவே, அறம் நிலைக்கச் சட்டம் அச்சாணியாகிறது. அந்த அச்சாணியின் ஒழுங்குக்கும், நேர்த்திக்கும், வலுவுக்கும் பங்கம் விளைவிக்கப் பார்க்கிறாய். சாத்தானே, அப்பாலே போ. நான் கீழே குதியேன். உன் தேவனுகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாக.

---

கதை எழுதிப் பரிசு பெறுங்கள்

# காவலன் சிறுகதைப் போட்டி

**1-ம் பரிசு பத்து (10/-) ரூபா.**

**2-ம் பரிசு ஐந்து (5/-) ரூபா.**

சிறந்த கருத்துள்ள கதைகள் காவலனில் பிரசுரிக்கப்படும்.

- நீங்கள் எழுதவேண்டிய சிறுகதை "உண்மை பேசுதல்" என்ற பொருள் கொண்டிருக்க வேண்டும்.
- வெண் தாளில் ( புள்ஸ்காப் ) இரு பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
- இந்தச் சிறுகதைப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டும்தான் பங்கு கொள்ளலாம்.
- காவலனில் உள்ள அனுமதிப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- முடிவுத்தேதி 19-4-69.
- அனுப்பவேண்டிய முகவரி:

"காவலன் சிறுகதைப் போட்டி",
தபால் பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்.

## காவலன் சிறுகதை அனுமதிப் பத்திரம்

பெயர் : ..............................................

வகுப்பு : ..............................................

பாடசாலை : ..............................................

..............................................

✠

சுவாமி! உமது தயையின் விசாலத்துக்குச் சரியானபடி என்பேரில் இரக்கமாயிரும் (சங். 50 : 1).

## நினைவு கூருவோம்

**சங். சகோ. மேரி பெலிசிற்றுஸ்— 2-ம்ஆண்டு நிறைவு**

தோற்றம்: 1—12—43. மறைவு: 13—4—67.

நித்திய பிதாவே! உமது குமாரனுகிய யேசுவின் விலைமதிக்கப்படாத திருஇரத்தப் பலன்களைப்பார்த்து, மரித்த உமது அடியாளாகிய இவவுக்கு நித்தியநாட்டின் முடிவில்லாத ஒளியை அளித்தருளும்.

இவ்வுலகை விட்டுமறைந்தாலும் எம் உள்ளங்களை விட்டுஅகலாத அன்புத் தீபமான அருமைமகள் பெலிசிற்றுஸ் அமரத்துவமடைந்த 2-ஆம்ஆண்டு 13-4-69இல் நிறைவுபெறுகின்றது. அன்று அவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நீர்கொழும்பு — குடாப்பாடு புனித செபமாலை மரியன்னையின் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சகோதரர், கன்னியர், பந்துமித்திரர், விசுவாசிகள் யாவரும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பரிவுடன் பணிவாய் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் பெற்றோர் : எஸ். எஸ். றெட்றிகோ தம்பதிகளும், சகோதர சகோதரிகளும்.

52/2, மேரியன்வீதி, நீர்கொழும்பு.

---

**மரித்தும் எழுந்த சத்தியமே மரணம் இன்மையின் தத்துவமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை — 1969

| | | | |
|---|---|---|---|
| 19 | சனி | சனிக்கிழமையில் பரி. மரியன்னையின் பூசை. | [வெ] |
| 20 | ஞாயிறு | பாஸ்கா விழாவுக்குப்பின் 2-ம் ஞாயிறு | [வெ] |
| 21 | திங்கள் | புனித அன்செல்ம் | [வெ] |
| 22 | செவ்வாய் | புனிதர்கள் சோத்தர், காயுஸ் | [சி] |
| 23 | புதன் | கிழமைப்பூசை | [வெ] |
| 24 | வியாழன் | புனித சிக்மரிங்கா பிதேலிஸ் | [சி] |
| 25 | வெள்ளி | புனித மாற்கு | [சி] |
| 26 | சனி | புனிதர்கள் கிளேத்துஸ், மார்செல்லினுஸ் | [சி] |

# காவலன் கருத்து

## உத்தானமாயினர்

பெரிய வெள்ளியன்று எமது ஆலயங்களும் பலிபீடங்களும் பாழாக — வெறுமையாகக் காட்சியளித்தன. ஒரு தனிமை, ஆண்டவர் எம்மை விட்டுப் போய் விட்டார் என்ற ஏக்கம் எம்முள்ளத்தில் எழுந்தது.

மூன்றும் நாள். அவர் மீண்டும் உத்தானமானர் என்பதை ஆலயத்தில் புஷ்பங்களும் தீபங்களும் எமக்குப் பறைசாற்றுகின்றன. திருவழிபாட்டின் வார்த்தைகளிலும் திருச்சபையின் மகிழ்ச்சி வெளிப்படுகின்றது. ஆண்டவரின் உத்தானத்தைக் குறித்து தன்னோடு சேர்ந்து களிகூருமாறு திருச்சபை தன் மக்களுக்குக் கட்டளையிடுகிறது. அல்லேலூயா என்ற வெற்றிக்கோஷம் எட்டுத் திக்கிலும் எதிரொலிக்க, கல்லறையினின்று வெற்றிவீரராக வெளிவந்த ஆண்டவரின் உத்தானத்தில் களிகூருகிறது. எந்தத் துன்பமோ கஷ்டமோ சிலுவையின் பாரமோ இக்களிப்பை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் இது சகல துன்பமும் வெற்றி கொள்ளப்பட்ட திருநாளாகும். "கர்த்தர் உண்டாக்கிய நாளிதுவே, இன்று களிகூர்ந்து மகிழுவோம்" என சங்கீத ஆசிரியர் இந்நன்னாளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் கிறிஸ்து உயிர்த்தபோது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இடையே நின்ற பாவப்பெருமுகில் கலைக்கப்பட்டு மனிதன் தன் சிருஷ்டிகரின் புன்னகையை மீண்டும் நோக்கவும் அவரது அன்பை மீண்டும் உணரவும் வழியேற்பட்டது. அன்றே ஒரு புதிய சகாப்தம், ஒரு புதிய வாழ்வு உதயமாயிற்று. விண்ணும் மண்ணும் களிகூர்ந்தன

நாம் தகுதியுடையவர்களாயிருப்பின் அதே களிப்பு இன்று எமக்கும் உரியதாகும். உத்தானமான கிறிஸ்துவுடன் வாழவேண்டுமாகில் நாம் பாவத்துக்குமரிக்க வேண்டும். தவக்காலத்தில் நல்ல பாவசங்கீர்த்தனத்தால் சுத்திகரிக்கப்பட்டு நற்கருணையினால் அலங்கரிக்கப்பட்ட ஆத்துமாவே உத்தானத்தின் சந்தோஷத்தை அனுபவிக்கமுடியும்.

[5ஆம்கலத் தொடர்ச்சி]

லூரி, மாதகல் ஆகிய இடங்களில் இருந்த ஆங்கிலப் பாடசாலைகளில் அதிபராய் இருந்து ஆற்றிய கல்விச்சேவை அளப்பரியது. பல ஏழைப் பிள்ளைகளை உயர்ந்த உத்தியோகங்களிலும் குரு பதவியிலும் அமருமாறு அருங் கல்விஊட்டிய பெருமை அவருக்கே உரியது.

**ஆத்தும இரட்சணிய சேவை :**

இத்துறையில் அவருக்கு இருந்த ஆர்வம் தான் என்ன? "ஒரு கோயில் தேவனின் ஆலயம்" எனவே அது அழகாகவும் பெரிதாகவும் காட்சி அளிக்கவேண்டுமென்ற ஆசை கொண்டவராய்த் தாம் மீசாம்வேலை பார்த்த இடங்களில் பாரிய கோயில்களைக் கட்டி எழுப்ப அரும் பாடுபட்டார். கரம்பொன் பதியிலே இன்று அழகே மயமாக விளங்கும் அர்ச். செபஸ்தியார் ஆலயத் திருப்பணியில் அவர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சி பாராட்டத்தக்கது.

**பிரசங்கத் திறன் :**

செந்தமிழிலே சுவாமியவர்கள் தமது வாய்ச்சால வாக்கலங்கார பிரசங்கங்களின்போது தேவ வாக்கியங்களை எடுத்துக்காட்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

மகா வந்தனைக்குரிய

# லஉடாடியோ ஆண்டகையின் மறைவு

காலி மேற்றிராசனத்தின் இளைப்பாறிய மேற்றிராணியாரான மகா வங். என். எம். லஉடாடியோ ஆண்டவகை அவர்கள் சித்திரை முதலாம் திகதி காலமாயினர்.

லஉடாடியோ ஆண்டகை இத்தாலி தேசத்திலே இற்றைக்கு 78 வருடங்களுக்கு முன்னே பிறந்து தமது 14-ம் வயதிலே யேசுசபையைச் சேர்ந்தார். எல்லோராலும் ஒரு சிறந்த கல்விமானாக மதிக்கப்பட்டார். முதலாம உலகப் போரிலே சேவை செய்ய வேண்டி இருந்ததால் அவரைக் குருவாக அபிஷேகம் பண்ணுவதில் தாமதம் ஏற்பட்டது. யுத்தத்தின்பின் 1924-ம் ஆண்டு தமது 33-ம்பராயத்தில் இலங்கை வந்து சேர்ந்து காலி மேற்றிராசனத்திலேயுள்ள பலாங்கொடை, கேகாலை, இரத்தினபுரி, எட்டியாந்தோட்டை ஆதியாம் பங்குகளில் தொண்டாற்றினர்.



1934-ம் ஆண்டில் காலி மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டு அம்மேற்றிராசனத்தின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்து வந்தார். அநேக பாடசாலைகளும், அனாதமடங்களும் அங்கே நிறுவப்பட்டன. சுதேச குருமாரின் தொகையை அதிகரிப்பதில் அவர் எடுத்த முயற்சி பாராட்டப்படத்தக்கது. குருக்கள், கன்னியர், விசுவாசிகள், பிறசமயத்தவர் எலலோரினதும் பெருமதிப்பையும், அன்பையும் பெற்றார்.


1965இல் சுகபெலன் குன்றிப்போனதால் காலிமேற்றிராசனப் பொறுப்பிலிருந்து இளைப்பாறிக்கொண்டார். இவரின் இடத்தில் மகா வங். அன்ரனி சேரம் காலிமேற்றிராசனத்தின் முதற் சுதேச மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார்.

லஉடாடியோ ஆண்டகையின் பூதவுடல் 7-ம்திகதி காலியில் அடக்கம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்குகளில் இலங்கை மேற்றிராணிமாரும், பலகுருமார், கன்னியரும், ஆயிரக்கணக்கான விசுவாசிகளும் பங்குபற்றினர்.

R. I. P.

# வண. பிலிப்பு நீக்கிலாஸ், ஓ. எம். ஐ. சுவாமிகளின் மறைவு

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் வெகு முதிய குருப்பிரசாதிகளில் ஒருவரும், பேர்பெற்ற பிரசங்கியாரும், ஆத்ம இரட்சணிய சேவையில் ஆர்வம் படைத்தவரும், அனுபவம் நிறைந்த கல்விமானும், எல்லோருடையவும் நன்மதிப்பையும் பேரன்பையும் கவர்ந்தவருமான பி. நீக்கிலாஸ் O. M. I. சுவாமியார் இம்மாதம் 6ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினமன்று தமது 86ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரின் பூதவுடல் விசுவாசிகளின் அஞ்சலிக்காக மேற்றிராசன இல்லச் சிறுகோவிலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் 7ஆந் திகதி மாலை 4-30 மணிக்கு ஆசனக் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே குருப்பிரசாதிகளின் செபங்களின்பின் அதி வண. லெக்குத்தூர் சுவாமியாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின் ஆசனக்கோவிலில் கூடியிருந்த பெருந்திரளான குருமார், கன்னியர் காலஞ்சென்றகுரவரின் உறவினர், மேற்றிராசனத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வந்து குழுமியிருந்த விசுவாசிகள், பிற சமயத்தோர் மத்தியில் அதிவண. மதுரநாயகம் சுவாமியாரால் அந்திமசடங்குகள் கோயிலில் நிறைவேற்றியபின் அவருடைய பூதவுடல் ஊர்வலமாக சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு வண. S. வில்லவரசிங்கம் சுவாமியாரால் நிறைவேற்றப்பட்ட திருச்சடங்குகளுடன் புனிதமாக அவருடைய சடலம் பூமதானம் செய்யப்பட்டது.



### சீவிய வரலாறு

வண. பிலிப்பு நீக்கிலாஸ் சுவமி அவர்கள் 1884ஆம் ஆண்டு மாசிமாதம் 23-ந் திகதி வதிரியில் பிறந்தார். அவர் 1896ஆம் ஆண்டில் அர்ச். மாட்டீன் குருமடத்தைச் சேர்ந்த சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தார். அதன்பின் கொழும்பிலுள்ள அர்ச். பேர்னட் குருமடத்தில் தமது குருத்துவக் கல்வி கற்கச் சென்றார். 1910ஆம் ஆண்டு ஓ. எம். ஐ. கூட்ட வாக்குத்தத்தத்தை எடுத்தபின் 1912ஆம் ஆண்டு தை மாதம் 6ஆந் திகதி மூவிராசாக்கள் திருநாளன்று மகா வங். யாழ். மேற்றிராணியாரான யூலன் ஆண்டவர் அவர்களால் குருப்பட்டம் அளிக்கப்பட்டார். அன்று அவருடன் காலஞ்சென்ற வண. B. A. தோமாஸ், O. M. I. அடிகளாரும், யாழ். மேற்றிராசனத்தின் அனுபவம் மிக்க அடிகளாகிய வண. S இம்மானுவேல் சுவாமியாரும் இவருடன் குருப்பட்டம் பெற்றமை ஈண்டு நினைவுறத்தக்கது.

இக் குரவரின் பலதிறப்பட்ட சேவைகளை இங்கு வரைவது இயலாத காரியமொன்றே. அவர் முல்லைத்தீவு, நல்லூர், மன்னார், நெடுந்தீவு, கரம்பன், பாஷையூர் போன்ற இடங்களில் உதவிக் கட்டளைக் குரவராகவும் அதன்பின் கட்டளைக்குரவராயும் செய்த அரிய பெரிய தொண்டுகளை இங்கு எடுத்துக்கூற எவராலும் முடியாது. அக்காலத்துக் குருமார் செய்த அளப்பரிய தொண்டு அவர்களில் இருந்த தணியாத ஆத்மதாகம் அவர்களுக்கு இருந்த பிரயாணக் கஷ்டங்கள், பசி, தாகம் போன்ற தியாகங்கள் சொல்லுந்தரமன்று.

காலஞ்சென்ற வண. நீக்கிலாஸ்சுவாமி செய்த மட்டற்ற சேவையை முப்பெருந் தலையங்கங்களில் வகுத்துக்கூறுதல் பொருத்தமுடைத்து.

**கல்விச் சேவை:**

அவர் முல்லைத்தீவு, சம்பத்திரிசியார் கல்

[1ஆம்கலம் பார்க்கவும்]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ. சித்திரை மீ 12 ஆம் உ. சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org